# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

நாள்: 9.5.2019

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் 35-ஆம் ஆண்டு தோற்றுவிப்பு நாள் விழா மற்றும் அழகப்பா பல்கலைக்கழக அலுவலர்கள் தினம் 8.5.2019 அன்று பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக் கருத்தரங்க அறையில் சிறப்பாக நடைபெற்றது.




பல்கலைக்கழக பதிவாளர் பேரா. ஹா.குருமல்லேஷ் பிரபு அவர்கள் தனது வரவேற்புரையில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளையும் சாதனைகளையும், அதன் பரிணாம வளர்ச்சியையும் எடுத்துரைத்தார். அழகப்பா பல்கலைக்கழகம் பல்வேறு தரங்களையும், விருதுகளையும் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து துணைவேந்தர்கள், பதிவாளர்கள், அனைத்து அதிகாரிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரது பங்களிப்பு மிக முக்கியமாக இருந்துள்ளது என்றார்.

இவ்விழாவிற்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா. நா. இராஜேந்திரன் அவர்கள் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில், அழகப்பா பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டு 34 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் இப்பல்கலைக்கழகம் இந்திய மற்றும் உலகளவில் பல்வேறு தரங்களையும், பெருமைகளையும், சிறப்புகளையும் பெற்று முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இத்தருணத்தில் அழகப்பா பல்கலைக்கழகம் தோன்றுவதற்கு தனது வாழ்வையும் உடைமைகள் அனைத்தையும் அள்ளித்தந்த வள்ளல் அழகப்பருக்கு நாம் அனைவரும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம் என்றார். தற்பொழுது தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று தரமதிப்பீட்டில் "ஏ பிளஸ்" தரத்தையும் தமிழக அளவில் அரசு பல்கலைக்கழக வரிசையில் முதலிடத்தையும், அகில இந்திய அளவில் அரசு பல்கலைக்கழக வரிசையில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ள அழகப்பா பல்கலைக்கழகமானது தலைசிறந்த பன்னாட்டு பல்கலைக்கழகங்களுடன் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிட்டு பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளவதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறது. இதன் மூலம் வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு வருவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

மேலும், இத்தகைய சிறப்புகளை பெறுவதற்கு உறுதுணையாக இருந்த மேனாள் துணைவேந்தர்களையும், பதிவாளர்களையும், பேராசிரியர்களையும், நிர்வாக அலுவலர்களையும் மற்றும் மாணவர்களையும் நினைவு கூர்வது நமது முக்கிய கடமையாகும் என்றார். ஒரு பல்கலைக்கழகம் தலை சிறந்த பல்கலைக்கழகமாக வருவதற்கு ஆசிரியர்களின் பங்களிப்பு எந்தளவிற்கு முக்கியமோ அந்த அளவிற்கு நிர்வாக பணியாளர்களின் பங்களிப்பும் முக்கியமானது என்றார். அனைவரும் ஒன்று சேர்ந்து முழு ஈடுபாட்டுடன் உழைத்தால் மட்டுமே பல்கலைக்கழகம் உயர்ந்த நிலையை அடைய முடியும் என்றும் அதற்காக நிர்வாக பணியாளர்கள் உற்சாகத்துடன் பணியாற்ற வேண்டும் என்றார்.

இவ்விழாவிற்கு அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் ப.இராமசாமி அவர்கள் சிறப்புரையாற்றினார். அவர் தமது சிறப்புரையில், கடந்த பத்து ஆண்டுகளில் அழகப்பா பல்கலைக்கழகமானது, மாணவர் சேர்க்கை, ஆராய்ச்சி, கலை மற்றும் விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் அபரிமிதமான வளர்ச்சியை கண்டுள்ளதாக குறிப்பிட்டார். மேலும் பேராசிரியர்களின் திறமை, நிர்வாக அலுவலர்களின் கடின உழைப்பு மற்றும் மாணவர்களின் பன்முக திறன்களால் இப்பல்கலைக்கழகமானது மேலும் பல்வேறு சிறப்புகளையும், விருதுகளையும் பெறுவதற்கான வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில், சிறந்த சிந்தனைமிக்க அறிஞர்களால் மட்டுமே அரிதான முயற்சிகளையும், சாதனைகளையும், குறிக்கோள்களையும் அடைய முடியும் என்றார். திறனுடன் கூடிய கல்வி மற்றும் திறன் இல்லாத கல்வி இவ்விரண்டும் பணக்காரன் ஏழை என்ற வித்தியாசத்தை விட மோசமானது என்றும் திறனோடு கூடிய கல்வியை அனைவருக்கும் வழங்குவது என்பதே உயர்கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும் என்றார். எந்தவொரு செயலிலும் செம்மை என்பது ஒரு விபத்து போன்றது அல்ல, அதே நேரத்தில் செம்மையை அடைவதற்காக நாம் காட்டும் தீவிரம், முழு ஈடுபாடு, உண்மையான முயற்சி, அவற்றை செயல்படுத்தும் விதம் இவைகளைப் பொறுத்தே அச்செயலின் செம்மை அமையும் என்று பேரறிஞர் அரிஸ்டாடில் கூறியதை நினைவு கூர்ந்தார். உயர்கல்வியில் தொடர்ந்து பல்வேறு சாதனைகளை படைத்து வரும் இப்பல்கலைக்கழகம் உலக பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் விரைவில் இடம் பெறவேண்டும் என்ற தனது ஆவலைத் தெரிவித்தார்.

இவ்விழாவில் நிதி அலுவலர் (பொ) பேரா. வி. பாலசந்திரன் அவர்கள், துணைப் பதிவாளர்கள் முனைவர். மா. ஜெயபாரதி, திரு. மகா. பாலசுப்ரமணியன், அழகப்பா பல்கலைக்கழக அலுவலர் சங்கத் தலைவர் திரு. என்.அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவில் அனைத்து பல்கலைக்கழக நிர்வாக அலுவலர்களுக்கும் அவர்களது சீரிய பணிகளைப் பாராட்டி பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிறைவாக தேர்வாணையர் பேரா. கா. உதயசூரியன் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், அதிகாரிகள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு
பதிவாளர்